Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

PC PARADISE

நியாயமான விலையில் தரமான கணனிகளையும் கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise

இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)

TP No. 0777-271220 (சி-283)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 09 (14.12.2002) சனிக்கிழமை இதழ் : 74

# வெளிநாட்டு அதிகாரிகள் வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு



அவுஸ்திரேலிய நீதிபதியுடன் சு.ப. தமிழ்ச்செல்வன் பேச்சு. உள்ளே – ஜேர்மன் குழுவுடன் சந்திப்பு.

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை பலதரப்பட்ட வெளிநாட்டு அதிகாரிகள் சந்தித்து பேசியுள்ளனர். அவுஸ்திரேலிய நீதிபதி, ஜேர்மன் இனவிவகார அமைச்சின் வெளிவிவகாரத் தலைவர், ஜேர்மன் தூதுவர், ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ஆகியோரே நேற்றுத் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியவர்களாவர்.

நேற்றுக்காலை- அவுஸ்திரேலிய நீதிபதிக்கும், தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவருடன் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

இப்பேச்சுவார்த்தையில், அவுஸ்திரேலிய நீதிபதி - ஓர் இனத்தின் மொழி, கல்வி, பண்பாடு, கலை என்பவற்றைப் பேணுவதற்கு தனியான ஆட்சி அமைப்பு இருக்க வேண்டியது அவசியம் என்றார்.

அப்போது அவர் தொடர்ந்தும்- இலங்கையில் இனங்களுக்கிடையில் உள்ள முரண்பாடுகளைத் தாம் ஆய்வு செய்யும்போது, அதன் அடிப்படை

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பானிய உதவித்திட்ட மதிப்பீடுகள் ஆரம்பமாகின



யாழ். வந்த ஜப்பானிய உயரதிகாரிகள் குழு

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட கிழக்குப்பகுதிகளில் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும், அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவைகள் தொடர்பாகவும் ஜப்பானிய அரசு நேரடி மதிப்பீடு செய்ய ஆரம்பித்துள்ளது.

மேற்படி மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக, ஜப்பானிய அரசு- உயர் மட்ட அதிகாரிகள் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

இக்குழுவினர் கடந்த பத்தாம் திகதி முதல் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். மேற்படி மதிப்

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

## தென்னாசியாவில் 3வது கடற்படை கடற்புலிகளே என்கிறார் கதிர்காமர்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது பற்றி அடுத்த பேச்சுவார்த்தையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும். ஆயுதங்களை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அரசாங்கத்திற்கு அச்சுறுத்தலாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு எத்தனை நாட்கள் சென்ற பின்னரும், புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவில்லை. இந்து மா சமுத்திரத்தின் மூன்றாவது கடற்படை அணி ஒன்று உருவாகியுள்ளது. இந்தியா மற்றும் இலங்கைக் கடற்படையினருக்கு ஈடாக புலிகளின் கடற்படை இந்து மா சமுத்திரத்தில் பலம் பெற்றுள்ளது தெற்காசியப் பிராந்தியத்திற்கு அச்சுறுத்தலாகும். ஆகவேதான் இந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதம் ஒப்படைக்க கேட்பது வேடிக்கை

## ஒரு மரபுப் படையணி சம்மதிக்காது கதிர்காமருக்கு ஜி.எல்.பீரிஸ் பதிலடி

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு எட்டப்படும்வரை எந்தவொரு கெரில்லா இயக்கம்கூட ஆயுதங்களை ஒப்படைத்ததாக வரலாறு இல்லை. இந்நிலையில், மரபுப் படையணியாக மாறியிருக்கும் விடுதலைப்புலிகளுடன் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர், ஆயுதங்களை ஒப்படைக்குமாறு கேட்பது வேடிக்கையானது என அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.**

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கையளிக்குமாறு பேச்சுவார்த்தை மேசையில் அரசாங்கம் கேட்கவேண்டும் என பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துத் தொடர்பாகக் கேட்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைகள் தற்போதுதான் ஆரம்பித்திருக்கின்றன. அதுவும் அரசியல் தீர்வு குறித்து

(10ஆம் பக்கம் பார்க்க)

# நெல்லியடியில் கைதான 14 பொதுமக்கள் விடுதலை

## வாரம் இரு தடவை கையொப்பமிடப் பணிப்பு

(நெல்லியடி)

நெல்லியடிப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக, அப்பகுதியில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட 14 பேரும் நேற்று மாலை பருத்தித்துறை நீதவான் மன்றில் பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜராகினர்.

சற் குணசிங்கம் ஜனார்த்தனன் (வயது 13) என்ற மாணவன் மட்டுமே ஆட்பிணையில் செல்ல அனுமதி வழங்கிய நீதவான், ஏனைய 13 பேருக்கும் ஆட்பிணை அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

பொலிஸ் பொறுப்பதிகாரி, மேலிடத்து உத்தரவு தமக்குக் கிடைத்துள்ளதாகவும், தாங்கள் பிணையை ஆட்சேபிக்கவில்லை என்றும் தெரிவித்ததன் பின்னர், யாழ். பதில் நீதவான் ஏனையவர்களுக்கும் பிணை அனுமதியை வழங்கினார்.

இப்பதின்நான்கு பேரையும்- தலா ஐம்பதினாயிரம் ரூபா ஆட்பிணையிலும், ஒவ்வொரு திங்கள், புதன்கிழமைகளில் பருத்தித்துறை நீதிமன்றில் வந்து கையொப்பமிடும் நிபந்தனையிலும் நீதவான் அவர்களை விடுதலை செய்தார்.

ஊர்வலங்கள், வன்செயல்களில் ஈடுபட்டால் ஆட்பிணை இரத்துச் செய்யப்படும் எனவும், பதில் நீதவானால் எச்சரிக்கை செய்யப்பட்டு பிணையில் செல்ல இவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

பிணையில் விடுவிக்கப்பட்டோர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



அம்மாட சுத்தமான விசுவாசி கதிர்காமர் ஐயாதான்...

**இன்றைய சிறப்பிதழ் சிறுவர் அரங்கம்**

# கிழக்குக் கடலில் மர்மக் கப்பல் கடற்படையினர் தீவிர தேடுதல்

(கொழும்பு)

கிழக்குக் கடற்பரப்பில் நேற்றுக் காலை இனந்தெரியாத ஆயுதக் கப்பல் ஒன்று வருவதாகக் கிடைத்த தகவலையடுத்து, நேற்று முழுவதும் இப்பகுதியில் கடற்படையினரும் விமானப்படையினரும் தேடுதல் வேட்டையை நடத்தினர்.

இந்த ஆயுதக் கப்பல், கிழக்குப் பகுதியில் முல்லைத்தீவுக்கும் மட்டக்களப்பிற்கும் இடையில் ஓர்

(10ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலையில் இன்று பாதுகாப்புக்குழு கூட்டம்

(கிளிநொச்சி)

பாதுகாப்பு உபகுழுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு முகமாலையில் நடைபெறுகிறது. இக் கூட்டத்திற்கு விடுதலைப்புலிகள் தரப்பிற்கு, கேணல் கருணா தலைமையிலான குழுவும், அரச தரப்பில் பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையிலான குழுவும் பங்குபற்றுகின்றன.

புலிகள் தரப்பில் கேணல் தீபன், கேணல் ஜெயம், மற்றும் மாவட்ட அரசியல் பொறுப்பாளர்களும் பங்குபற்றுகின்றனர். அரச தரப்பில் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பொலிஸ்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கப்பல் வழி மறிப்பு: அமெரிக்காவின் கடற் கொள்ளை

## வடகொரியா குற்றச்சாட்டு




கப்பலில் இருந்த இரசாயனத் திரவக் கொள்கலன்

வடகொரியாவிலிருந்து யேமன் நாட்டுக்கு பெருமளவு ஆயுதங்களை ஏற்றிச்சென்ற சரக்குக்கப்பலை அமெரிக்கா இடையில் மடக்கிச் சோதனையிட்டதை 'கடற்கொள்ளை' என வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. கடந்த செவ்வாயன்று ஸ்பானியக் கடற்படையினரால் இடைமறிக்கப்பட்ட இக்கப்பல், அமெரிக்க அதிகாரிகளாலும் சோதனையிடப்பட்டது. கப்பலினுள் காணப்பட்ட 15 ஸ்கட் ரக ஏவுகணைகளும் பாதுகாப்புக்காகவே கொண்டு செல்லப்பட்டதாக யேமன் அரசு அறிவித்ததைத் தொடர்ந்து கப்பல் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது.

ஸ்பெயின் கடற்படையின் இந்தக்கப்பல் மறிப்பு, சர்வதேச கப்பல் போக்குவரத்து சட்டங்களை மீறும் செயல் என வட கொரியா குற்றஞ் சாட்டியுள்ளது. கப்பலுக்கும் மாலு



கப்பலைச் சோதனையிட இறங்கும் படையினர்

மிகளுக்கும் ஏற்பட்ட பொருள் மற்றும் மனச்சிதைவுக்கு அமெரிக்கா மன்னிப்புக் கோரவேண்டும் என வட கொரிய வெளியுறவு அமைச்சு கேட்டுள்ளது.

வடகொரியாவின், சோசான் என்ற பெயருடைய இந்தக்கப்பல் வார இறுதியில், யேமன் துறைமுகத்தை வந்தடையும் எனக்கருதப்படுகிறது.

அராபியக்கடலில் இது ஸ்பானியக் கடற்படையினரால் இரு நாட்களாக தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

ஸ்கட் ஏவுகணைகள், ஏன் சீமெந்து மூடைகளின் அடியில் ஒளித்து



சீமெந்து மூடைகளுக்கு அடியில் காணப்படும் ஏவுகணைக் கொள்கலன்

வைக்கப்பட்டிருந்தன என்றும், கப்பல்-ஏன் தனது அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய கொடிகள் எதையும் பறக்க விட்டிருக்கவில்லை என்றும் அமெரிக்க புலனாய்வாளர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஸ்கட் ஏவுகணைகளை, யேமன் அரசு - தன் பாவனைக்காக கொள்வனவு செய்வதாகக் கூறியபோதிலும், இது - அங்கு செயற்படும் அல்கொய்டா போன்ற முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களின் கைக்குச் சென்றுவிடலாம் என அமெரிக்கா அஞ்சுகின்றது.



ஹொன்டுயூராசில், அமெரிக்க இராணுவ பிளக்ஹோக் ஹெலி பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது வீழ்ந்து நொருங்கியது. இதில் கொல்லப்பட்ட 5 அமெரிக்கப் படையினரில் ஒருவரின் சடலம் சகாக்களால் எடுத்துச் செல்லப்படுகிறது.



அமெரிக்க ராணுவ வாகனத்தில் சிக்குண்டு இரு கொரியச் சிறுமிகள் இறந்த சம்பவத்துக்கு ஜனாதிபதி புஷ் மன்னிப்புக் கோரவேண்டும் எனக் கோரி, சியோல் நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தென்கொரியர்கள்.


**ராஜா**
யாழ்ப்பாணம்.



ஆறாவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-262)

**நிறஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல் முரளி, பிரதியூஷா,
மனோஜ், உமா நடித்த
**கடல் பூக்கள்**
17ஆம் திகதி முதல்
AIR FORCE - I
காட்சிகள்:
11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-287)

**மீண்டும் இயங்க ஆரம்பம்**

பலாலி சாலை, 325, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி - கந்தையா தாமோதரம்பிள்ளை கட்டடத்தில் -
**தியாகு கலைக்கூடம்**
**மரக் கடைச்சல் தொழிலகம்**
பதிவு இல: NA.L. 70
15.12.2002 ஞாயிறு ஆரம்பமாகிறது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறேன்.

**கந்தையா தியாகராசா**
325, பலாலி சாலை,
பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.
(சி-286)

**MEDICAL CHECK UP**
**வைத்திய பரிசோதனை**
**நோய் வருமுன் காப்போம்!**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்!**
- 40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐ செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை, இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP

குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்) ஆஸ்பத்திரி (முன்) வீதி, யாழ்ப்பாணம்.
(சி-237)

**அறிவித்தல்**
**யாழ்ப்பாணம் மாநகர சபை**
**மாநகர சபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகைக் குடியிருப்பாளர்கள் கவனத்திற்கு**

யாழ்ப்பாணம் மாநகரசபையுடன் வாடகைக் குடியிருப்பாளர்கள் செய்து கொண்ட உடன்படிக்கையின் 13 ஆவது விதியின் பிரகாரம் மாதாந்த வாடகைக் கட்டணத்தை அந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் செலுத்த வேண்டும் எனவும், தவறின் 10% தண்டம் அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
11.12.2002

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழப்பாணம்.

(சி/208)

**நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு**
**சிறப்புத் தள்ளுபடி!**
05.12.2002 முதல் 31.12.2002 வரை மட்டுமே
தரமோ உயர்வு! விலையோ மலிவு!!
**லைட்டன் புடவை நிலையம்**
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு 15.12.2002 ஞாயிறு முழுநேரமும் விற்பனை நடைபெறும்
பஸ் நிலையம் முன்பாக
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2222381
(சி-285)

**எங்கள் அன்பு வாடிக்கையாளருக்கு!**

கடந்த 44 வருட காலமாக கல்விக்காக சேவையாற்றியவரும் நாங்கள், யாழ்.நகரில் ஒரே கூரையின் கீழ் சகலவிதமான பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை உபயோகிக்கும் புத்தகங்கள், தமிழ், ஆங்கில நூல்கள், வாழ்த்து மடல்கள் நாட் குறிப்பேடு, நாட்காட்டி, பாடசாலைக்கான கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள், பாடசாலை உபயோகப் பொருட்கள், புத்தக அலுமாரி (Cupboard), சங்கீத - வாத்திய இசைக்கருவிகள், மாணவர்களின் கல்வி சம்பந்தமான உபயோகப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், அலுவலக உபயோகப் பொருட்கள், ஆரம்பப் பிரிவு மழலைகளுக்கான கல்வி உபயோகப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஆடர்கள் இலவசமாகப் பாடசாலைக்கே விநியோகிக்கப்படும்.

**இன்றே விஜயம் செய்யுங்கள்**
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்**
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

*தலைமை அலுவலகம்:*
A.C.D.I.L.,
371, Dam Street,
Colombo - 12.
T.P.No.- 434529, 336237, 543547.
Fax. No.- 541099

*கிளை :* புக் சென்ரர்
இல.05, சென் லூசியஸ் வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

No.81,
Armour Street,
Colombo - 13

**நன்றி நவில்கின்றோம்**

கரவெட்டியை பிறப்பிடமாக கொண்ட **அமரர் பஸ்தியாம் பிள்ளை கிறிஸ்தோப்பர் (இரத்தினம்)** அவர்களின் மறைவுச் செய்தி (28.10.2002) அறிந்து நேரிலும் தொலைநகல் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிச்சடங்கில் கலந்து மலர் வளையங்கள் வைத்து இரங்கல் பலியிலும், மரண ஊர்வலத்திலும் கலந்து கொண்ட ஆயர், குருக்கள், அருட் சகோதரிகள், அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளுக்கும் கியுடெக் நிர்வாகிகள், ஊழியர்களுக்கும் ஏனைய அமைப்புக்கள், குருக்களின் பிரதிநிதி களுக்கும் தனிப்பட்ட முறையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தினர் நன்றியினை தெரிவிக்கின்றோம்.

எமது துயரில் பகிர்ந்து ஆறுதல் அளித்தது போல், அமரரின் ஆன்மா சாந்தி பெறவும் இறைவனை பிரார்த்திக்க வேண்டி நிற்கின்றோம்.

அமரரின் குடும்பத்தினர் சார்பாக
மகன் - அருட்திரு C.G.ஜெயக்குமார்
(கியுடெக்)

சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(சி/305)

# வட- கிழக்கு நிலைமையை ஆராய எதிர்க்கட்சிகள் கொழும்பில் கூடும்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலுள்ள தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கென எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து அடுத்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூட்டமொன்றை நடத்தவுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான நிலைமை பற்றி இதில் ஆராயப்படுமென, இக்கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள- பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் அறிவித்துள்ளன.

இதேவேளை, இக்கூட்டம் பற்றி கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ-

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் கிழக்கு மாகாண நிலைமை அபாயகரமானதாக மாறி விட்டதாகவும் நாட்டின் ஏனைய இடங்களைப்போல அங்கும் சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கு அரசாங்கம் உடன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

## இத்தாலிக்கு ஆட்களை கடத்த உதவிய கடற்படையினர் பணி இடைநிறுத்தம்!

சட்டவிரோதமாக இத்தாலிக்கு ஆட்களை கடத்த உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைதான 13 கடற்படையினரும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இத்தாலிக்கு ஆட்களை கொண்டு செல்லும் முகவர்களிடம் படகுக்கு தலா 7 லட்சம் ரூபா பணம் பெற்றுக் கொண்டு இக்கடத்தலுக்கு உதவி புரிந்ததாக இக்கடற் படையினர் மீது குற்றஞ்சாட்டப் பட்டு, பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (01)

## இலவச சீருடை விநியோகம் கிராம சேவகர்கள் ஊடாக

(வவுனியா நிருபர்)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம் தொடர்பான புதிய நடைமுறைகள் குறித்து அரசாங்க அதிபர்கள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் கல்வியமைச்சர் சுரணிமல ராஜபக்ஸ கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்கள், கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

புதிய திட்டத்தின்படி, பாட சாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம் பிரதேச செயலர்கள் ஊடாகவே வழங்கப்படவுள்ளது. கிராம சேவை அலுவலர் வழியாக மாணவர்களுக்கான சீருடைத்துணிகளை பெறமுடியும்.

கடந்த காலங்களில் சீருடைத் துணி வழங்கலில் இடம்பெற்ற மோசடிகளையடுத்தே பிரதேச செயலகங்களூடாக இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுரணிமல ராஜபக்ஸ தெரிவித்தார். (03)

## பிரச்சினைக்கான தீர்வை இறக்குமதி செய்யக்கூடாது

### கருத்தரங்கில் தென்னாபிரிக்க நீதிபதி

(யாழ்ப்பாணம்)



வேறுநாடுகளின் அரசியல் அமைப்புக்களை அப்படியே நாம் உள்வாங்கிவிட முடியாது. மாறாக நாங்களே எங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சட்ட வரையறைகளை மேற்கொள்ள வேண்டும்.

தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரையில்,அது தன்னகத்தே சாதகமான, பாதகமான அனுபவங்கள் பலவற்றைக் கொண்டிருக்கின்றது. தென்னாபிரிக்கா மந்திரவித்தையான தீர்வுகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவில்லை. எமது பிரச்சினைகளுக்கு நாங்களே தீர்வுகளைக் கண்டோம்'.

இவ்வாறு தென்னாபிரிக்க நீதியரசர் அல்பி ஷார்க்ஸ் 'தென்னாபிரிக்க அரசியல் திட்ட உருவாக்கலில் சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கின் அரசியல்' என்ற தனது உரையில் தெரிவித்தார், பாஷையூரில் சுற்றுலா விடுதியொன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

மேலும் நீதியரசர் ஷார்க்ஸ் தெரிவிக்கையில், 'அனுசரித்துப் போதல்' என்பது 'ஏற்றுக்கொள்ளுதல்' என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அனுசரித்துப் போதல் என்பது எவ்வித கொள்கைகளும் அற்றது. ஆனால் ஏற்றுக்கொள்ளுதல் சில ஆழமான நோக்கங்களைக் கொண்டது. திட்டங்களை அடிப்படையாகக் கொண்டது. இதனை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்றார்.

## வட - கிழக்கில் என்ன நடக்கிறது என எவருக்குமே தெரியாது என்கிறார் சந்திரிகா

### அனுராதபுர கூட்டத்தில் உரை

(கொழும்பு)

சமாதானத்துக்காக உயிரையும் கொடுக்கத் தயார், ஆனால் எந்தக் காரணம் கொண்டும் நாட்டையோ நாட்டு மக்களையோ காட்டிக் கொடுக்கத் தயாரில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று எட்டு வருடங்கள் பூர்த்தி தொடர்பாக மாவட்டரீதியில் நடைபெறும் கூட்டங்களில் உரையாற்றி வரும் ஜனாதிபதி, நேற்று முன்தினம் அனுராதபுரத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வட - கிழக்கில் என்ன நடக்கிறது என்பது பற்றி எவருக்குமே தெரியாது. அரசாங்கம் சொல்வதையே நாங்கள் கேட்கவேண்டியுள்ளது. நாம் சமாதானத்துக்கு எதிரானவர்களல்ல - யார் எதிர்த்தாலும் நான் சமாதானத்தை ஆதரிக்கிறேன். இதற்காக உயிரை அர்ப்பணிக்கவும் தயங்கப் போவதில்லை.ஆனால், எந்தக் காரணத்துக்காகவும் நாட்டையோ, நாட்டு மக்களையோ காட்டிக் கொடுக்க மாட்டேன்.

எமது ஆட்சிக் காலத்தில் அரச நிறுவனங்கள் விற்பனையின்போது 60 சத வீதமான பங்குகளை வைத்துக்கொண்டே விற்பனை செய்தோம். சர்வதேச ரீதியில் விளம்பரப்படுத்தி, கேள்விப் பத்திரங்களைக் கோரியே அவற்றை விற்பனை செய்தோம். இன்று நடப்பதை மக்கள் நன்கு அறிவார்கள் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்தார்.

## இணைந்த சேவைசாரா அமைய ஊழியரை நிரந்தரமாக்க அரசாங்கம் நடவடிக்கை!

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றும் வேலை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகளில் பொது நிர்வாக அமைச்சு ஈடுபட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், ஊள்ளூராட்சி அமைப்புக்கள், அதிகாரசபைகளில்- அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றும், இணைந்த சேவை சாராத உத்தியோகத்தர்களை பதவியில் நிரந்தரமாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

அரச திணைக்களங்கள் மற்றும் அரசதுறை நிறுவனங்களில் தற்காலிக, அமைய ஊழியர்களா கக் கடமையாற்றுவோரின் விப ரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் வீரா விமலசிறி சகல அரச நிறுவனத் தலைவர்களையும் சுற்று நிருபம் மூலம் கேட்டுள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் அமைய அடிப்படையில் சேவையாற்றிய இணைந்த சேவை உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டனர். ஆனால்- இணைந்த சேவைசாரா ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாதமை குறித்து பொது நிர்வாக அமைச்சின் மதியுரைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதையடுத்தே இவ் ஊழியர்களை நிரந்தரமாக்க பொதுநிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.



கடந்த மாதம் 28ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்ட யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கற்கைநெறி இறுதிவருட மாணவர்களையும், துணைத்தலைவரையும் படத்தில் காணலாம். (41)




வீதியோரங்களில் வைத்து விற்கும் உணவுப் பொருட்களை வாங்கி உண்ணாதீர்கள்.

~ தமிழீழ சுகாதார சேவை.


## திருமலை - மாவட்டத்தினுள்

## குளங்கள் புனரமைப்பதற்கு ஜப்பான் 400 மில்லியன் உதவி

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நடுத்தர மற்றும் சிறிய குளங்களின் புனரமைப்புப் பணிகளுக்கென 400 மில்லியன் ரூபாவை உதவியாக வழங்குவதறகு ஜப்பான் முன்வந்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் கடந்த இரண்டு தசாப்த காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாததால் - விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்திருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டே ஜப்பான் இவ் உதவியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜப்பானிய அதிகாரி ஒருவர் திருமலை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதோடு - புனரமைப்புச் செய்ய வேண்டிய சில குளங்களையும் சென்று பார்வையிட்டுள்ளார்.

வட-கிழக்கில் இது போன்ற பல புனரமைப்புப் பணிகளைத் தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்த ஜப்பானிய அதிகாரி தெரிவித்தார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### ஜேர்மன் குழு விஜயம்

(உரும்பிராய்)

ஜேர்மன் தொழில்நுட்ப வலய கொழும்பு தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த தொழிற்கல்வி மற்றும் மகளிர் விவகார இணையத் திட்டங்களுக்குப் பொறுப்பான குமுதினி றோசா, அண்மையில் வடமராட்சி சுருக்கெழுத்து கழக நிலையத்திற்குச்சென்று அதன் செயற்பாடுகள் எதிர்காலத்திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது கழகத்தில் சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிலும் மாணவர்களுக்கு கணினிப்பயிற்சியும் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருவதாக அவர் உறுதியளித்தார்.

இவரது விஜயத்திற்கான ஏற்பாடுகளை தேசிய பயிலுநர் கைத தொழில் அதிகார சபையின் வட மாகாண முகாமையாளர் எஸ்.இராமநாதன் செய்திருந்தார். (84,61)

### உரும்பிராயில் கருணை இல்லம்

(ஊரெழு)

பெற்றோரை இழந்த பிள்ளைகளை இணைத்து அவர்களை முன்னேற்றும் பொருட்டு கடந்த திங்கட்கிழமை உரும்பிராயில் கருணை இல்லமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் 12 வயதிற்குட்பட்ட 6 பிள்ளைகள் தற்போது இணைந்துள்ளார்கள். மேற்படி இல்லமானது, உரும்பிராய் பிரதேசத்தைச் சேர்ந்த, தற்போது லண்டனில் வசித்து வருபவர்களின் உதவியுடன் இயங்கிவருகிறது. (96)

### மன்னாரில் விவசாயத்துக்கு அனுமதி

(வவுனியா நிருபர்)

மன்னார் - கட்டுக்கரைக் குளத தின் கீழ் பெரும்போக விவசாயச் செய்கையில் ஈடுபடப் படையினர் அனுமதி வழங்க இணங்கியுள்ளனர்.

மன்னாரில்- புலிகள் மற்றும் இராணுவத்தரப்பில் இடம்பெற்ற சந்திப்பையடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டது.

### ரி.ரி.என் வாழ்த்து நிகழ்ச்சி

எதிர்வரும் புதுவருட, தைப் பொங்கல் தினங்களை முன்னிட்டு புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான வாழ்த்து நிகழ்ச்சி ஒன்றை ரி.ரி.என் தொலைக்காட்சி ஒழுங்கு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமது சொந்தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புவோர் 2223919 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

### வல்லையில் பரவும் பாதீனியம்

(நெல்லியடி)

வல்லை வெளிப்பகுதியில், பருத்தித்துறை வீதியின் இரு மருங்கிலும் பருவ மழையை அடுத்து, பாதீனியம் வேகமாக வளர ஆரம்பித்துள்ளது. இந் நச்சுத தாவரம் மேலும் பரவி அருகில் உள்ள வயல்களுக்குப் பரவும் ஆபத்துள்ளதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். இதனால் தமது நெற்பயிர்கள் பாதிக்கப்படககூடும் என்றும் இதனை அழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். முன்னைய காலப்பகுதியில் இவ் விடங்களில் இவ்வாறான தாவரம் பரவியதைத் தொடர்ந்து, சிரமதானப்பணி மூலம் அவை அழிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (13)

### சாகித்ய மண்டல விருது

(வடமராட்சி கிழக்கு)

யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவத்துறைப் பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் எழுதிய 'சர்வதேச நாணயமும் முகாமைத்துவமும்' எனும் நூல், வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சாகித்ய மண்டல விருதைப் பெற்றுள்ளது.

# டக்ளசையும் நீதிமன்றத்துக்கு அழைக்க மாவை கோரிக்கை

## நாரந்தனை விசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கூட்டமைப்பினர் கடந்த வருடம் தேர்தல் பிரசாரத்திற்காகத் தீவகப் பகுதிக்குச் சென்ற சமயம் நாரந்தனையில் வைத்து ஈ.பி.டி.பியினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறிதது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் தனது சாட்சியத்தைத் தெரிவித்தார்.

இவ்வழக்கின் முப்பது சாட்சிகளில், 3 ஆவது சாட்சியாகிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தனது சாட்சியங்களைத் தெரிவிக்கும்போது, நாம் கடந்த வருடம் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி தீவகத்திற்கு நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்குப் பத்து வாகனங்களில் சென்று கொண்டிருந்தோம். இதில் எனது வாகனம் மூன்றாவதாகச் சென்று கொண்டிருந்த வேளை, எமக்கு முன்னால் சென்று கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் வாகனத்தை, நாரந்தனைச் சந்தியிலிருந்து ஒரு வாகனத்தில் வந்த ஐம்பதிற்கும் மேற்பட்டோர் தடிகளுடனும் ஆயுதங்களுடனும் பாய்ந்து வந்து கடுமையாகத் தாக்கியதுடன், எனது வாகனத்தையும் தாக்கினார்கள். இதன்போது இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது எனக்குப் பாதுகாப்புக்கு வந்த பொலிஸாரைத் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ய வேண்டாம் என உத்தரவிட்டுவிட்டு, நான் தாக்குதல் நடாத்தியவர்களுடன் கதைப்பதற்காக முன்னே சென்றவேளை எனது தலையில் இரும்புக் கம்பியால் கடுமையாகத் தாக்கினார்கள். அப்போது நான் எனது இரு கைகளாலும் தடுக்க முற்பட்டபோது- எனது தலை, கைகள் என்பன படுகாயமடைந்தன.

பின்னர் எம்முடன் வந்த பல்கலைக்கழக ஊழியர் பேரம்பலத்தைக் காயமடைந்த நிலையில் தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

இச்சம்பவங்களுக்குப் பிறகு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக ஐந்து நாட்கள் அனுமதிக்கப்பட்டேன். இதன்போது பொலிஸார் கேட்ட வாக்குமூலத்தில், எம்மைத் தாக்கிய ஈ.பி.டி.பியினரை என்னால் அடையாளம் காட்ட முடியும் எனத் தெரிவித்தேன். எனினும், இப்போது நான் இவர்களை அடையாளங்காட்ட மாட்டேன். ஏனெனில், நான காயமடைந்த சில நாட்களின் பின் பத்திரிகை ஒன்றுக்கு டக்ளஸ் தேவானந்தா "கூட்டமைப்பினர் தீவக மக்களைத் தரக்குறைவாகப் பேசியதனால் கோபமுற்ற தீவக மக்களே கூட்டமைப்பினரைத் தாக்கியுள்ளனர்" என்று தெரிவித்தார்.

எனவே, தீவகத்தை பன்னிரண்டு வருடங்களாக ஈ.பி.டி.பியினரே ஆட்சி செய்கின்றனர். எனவே, அங்குள்ள மக்களை ஈ.பி.டி.பியினருக்குத் தெரியும். எனவே எம்மைத் தாக்கியவர்களை டக்ளஸ் தேவானந்தா அடையாளம் காட்டட்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், இவர் தனது சாட்சியத்தின்போது நீதிமன்றத்திற்கு இரு கருத்துக்களைத் தெரிவித்தார். இதன்போது கடந்த வருடம் நாம் தாக்கப்பட்ட சம்பவம் மக்களுடன் தொடர்புடையதும் முக்கியமானதும் ஆகும். எனவே, தனியே எம்மிடம் மட்டும் சாட்சியங்களைக் கேட்காமல், டக்ளஸ் தேவானந்தாவையும் நீதிமன்றத்திற்கு அழைத்து அவரது சாட்சியத்தையும் பதிவு செய்ய வேண்டும் எனவும், இவ்விடயத்தில் நீதிமன்றம் விரைவாக செயற்பட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும் எனவும், இதன்மூலம் இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் தடுக்கமுடியும் எனவும் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் சாட்சியம் வழங்கவிருந்தபோதிலும் இவர் தற்போது லண்டனில் இருப்பதால், அடுத்த மாதம் பதினாறாம் திகதி சிவாஜிலிங்கத்தின் சாட்சியம் பதிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

# இந்து விவகார அமைச்சின் குறைகேள் சேவை யாழில்!

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மகேஸ்வரன் எதிர்வரும் 17 ஆம் திகதியில் இருந்து 22 ஆம் திகதிவரை காலை 9.30 மணியிலிருந்து பி.ப. 4.30 மணிவரை மக்கள் குறைகேள் சேவையொன்றை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகத்தில் நடாத்த இருக்கின்றார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள், அநாதைச் சிறுவர் இல்லங்கள் ஆகியவற்றைப் பற்றிய பூரணமான தரவுகளைப் பெறுதலும் பதிவு செய்தலும்.

கோயில்கள், இந்து சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரச்சினைகள் பற்றியும் அவைகளின் தேவைகள் பற்றியும் அறிந்து கொள்ளல்,

பாதிக்கப்பட்ட ஆலயங்கள் பற்றிய பூரணமான தகவல்களைப் பெறுதல், இந்து மயானங்கள் பற்றிய தகவலும், அவற்றுக்கான புனரமைப்புப் பற்றிய விபரமும்,

- ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த நடமாடும் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதென்றும், பொதுமக்கள் மாவட்டச் செயலகத்தில் உள்ள அமைச்சின் பிராந்திய செயலகத்தில் தமது தேவைகளை நிறைவேற்ற முடியும் என்றும், இந்துசமய விவகார அமைச்சின் பிராந்திய அலுவலக உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

## முன்பள்ளி கலைவிழா

(நவிண்டில்)

அல்வாய் பாரதிதாசன் முன்பள்ளி கலைவிழா கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது. நா.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்தியசீலன் கலந்து கொண்டார். இதில் முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## வலிகாமம் பகுதிகளில்

# தொடரும் பருவ மழையினால் விவசாயச் செய்கை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தொடர்மழை பெய்து வருவதால் விவசாயச் செய்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக, தற்போது செய்கை பண்ணப்பட்டுவரும் வெங்காயச் செய்கையும், உருளைக்கிழங்குச் செய்கையும் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. வலிகாமம் கிழக்கு மற்றும் வலி.வடக்கின் சில பகுதிகளிலும் வடமராட்சிப் பகுதிகளிலும் இம்முறை அதிகளவு விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வாரம் குடாநாட்டில் பெய்த தொடர்ச்சியான மழை காரணமாக மேற்படி விவசாயச் செய்கைகள் அதிகமாகப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. தாழ்ந்த பகுதிகளில் மழைநீர் இன்னமும் தேங்கியுள்ளது. அடுத்த வாரமும் மழை தொடர்ச்சியாக பெய்தால், இப்பாதிப்பு மேலும் அதிகரிக்கும். எனினும், நெற்செய்கை எப்பகுதியிலும் அதிகம் பாதிப்புக்குள்ளாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## அரசாங்கப் பாடசாலைகளில்

# தகவல் தொழில் நுட்பப் பாடத்தைக் கற்பிக்க பணம் அறவிடப்படுவது சட்டவிரோதமானது!

## கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் அறிவிப்பு

அரசாங்கப் பாடசாலைகளில் தகவல தொழில்நுட்பப் பாடத்தை- பாடசாலை நேரங்களில் கற்பிப்பதற்கு பணம் அறவிடுவது சட்டவிரோதமானதென்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் டி.ஐ. காரியவசம் தெரிவித்துள்ளார். இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது.



கோண்டாவில் கலட்டி லேனில் உள்ள மதகின் காப்புச் சுவர் உடைந்து, மக்களால் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

இதன் மற்றைய சுவரும் இடிந்து விழும் நிலையிலேயே உள்ளது.

இது பற்றி இவ்வீதியிலமைந்துள்ள நல்லூர் பிரதேச சபை மற்றும் நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கும் பலமுறை முறைப்பாடு செய்யப்பட்டும் இதுபற்றி அக்கறை காட்டப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

பாடசாலை நேரத்தில் தகவல் தொழில்நுட்பப்பாடத்தைக் கற்பிப்பதற்கு பல பாடசாலைகளில் பணம் அறவிடப்படுவதாகக் கல்வி அமைச்சுக்குப் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கப் பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பப்பாடத்தைக் கற்பிப்பதற்காக கணினிகள் போன்றவை இலவசமாகவே வழங்கப்பட்டன. இவற்றைப் பயன்படுத்துவதற்குப் பாடசாலைகள் பணத்தை அறவிடுவது சட்டவிரோதமானது.

பாடசாலை நேரத்தில் இப்பாடத்தைக் கற்பிக்கப் பணம் அறவீடு செய்ய வேண்டாம் என்று அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் அறிவுறுத்துமாறு கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளார்.

அத்துடன் - பாடசாலை நேரத்துக்குப் புறம்பாக - பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பப்பாடம் கற்பிக்கப்படுவதாயின், அதற்கு வலயக் கலவிப் பணிப்பாளர்களின் அனுமதி பெறப்பட வேண்டும். இதற்காகப் பணம் அறவிடப்படுவதாயின் அது தொடர்பான கணக்குகளைப் பரிசோதித்துக் கொள்ளுமாறும் கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : மு.யுனித்தா
முகவரி : கோண்டாவில்.

ஏழாவது அகவையில்



பெயர் :தி.மோகனதீபன்
முகவரி : 1 ம் வட்டாரம், நெடுந்தீவு.

எட்டாவது அகவையில்



பெயர் :நா.கௌதமன்
முகவரி:நீர்வேலி மத்தி, நீர்வேலி.

பத்தாவது அகவையில்



பெயர் :சி.டிலக்ஷன்
முகவரி:பெரியன்சீமா, தெல்லிப்பளை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

## காக்கையின் மூளை

அங்கம் - 2

தமிழில்- தி.தவபாலன்
நன்றி - ரிங்கிள்




## அவசரப்படாதே



வீட்டு நாயொன்று காட்டு வழியாகச் சென்று கொண்டிருக்கும்போது ஒரு காட்டு நாயைக் கண்டது. உடனே காட்டு நாய்க்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. அது வீட்டு நாயைப் பார்த்து "நண்பா, எனக்கு இக்காட்டில் சீரான சுதந்திரம் இல்லை. ஆகவே, என்னையும் உன் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்வாயா?" என்று கேட்டது. உடனே வீட்டு நாயும் சம்மதித்தது. வீட்டு நாய், காட்டு நாயைக் கூட்டிக் கொண்டு செல்லும்போது, காட்டு நாய், வீட்டு நாயின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த வளையத்தைக் கண்டது. அது - வீட்டு நாயிடம், "ஏன் இந்த வளையம் உன் கழுத்தில் உள்ளது?" என்று கேட்டது. அதற்கு வீட்டு நாய், "என்னை இவ்வாறு கட்டி வைத்து வளர்க்கின்றனர்" என்றது. அதைக் கேட்ட காட்டு நாய், "ஐயையோ! நான் அவசரப்பட்டு விட்டேனே, எனக்குக் காட்டில் சுதந்திரம் இல்லை என்றுதான் நான் உன்னுடன வந்தேன். ஆனால், நான் சுதந்திரம் இல்லை என்று கூறியது, நான் வேட்டையாடிக் கொடுக்கும் உணவில் காற்பகுதி உணவைத்தான் எனக்குக் கொடுப்பார்கள் என்றுதான் அவ்வாறு கூறினேன். ஆனால், நீ இங்கு கட்டப்பட்டு வளர்க்கப்படுகிறாய். ஆகவே, நான் காட்டுக்கே சென்று விடுகிறேன" என்று கூறிவிட்டுச் சென்று விட்டது. வீட்டு நாயோ கவலையுடன் தன் வீடு நோக்கிச் சென்றது.



பா. சிவாயனி,
தரம்: 5,
யாழ். கோண்டாவில் இ.ம.வி.



## சிறுவர் அரங்கம்

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகானும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:- 18-12-2002
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு — 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 தா | | | ■ |
| ■ | | | 4 | | |
| 5 | ளை | ■ | ன் | 6 | |
| று | 7 | | | 8 வா | |
| | | ■ | 9 | | |
| | | ■ | டு | | ■ |

முழுப் பெயர் : ..............................
கற்கும் பாடசாலை : ..............................
கற்கும் தரம் : ..............................
முகவரி : ..............................
..............................
கையொப்பம் .............................. திகதி ..............................

### இடமிருந்து வலம்

1. இதனை ஏற்படுத்தவே பேச்சுவார்த்தை நடக்கிறது.
4. சுவாசிக்க உதவும் உறுப்பு
5. பயிர்களிடையே இதுவும் வளரும்.
6. தேநீர் அருந்துமாறு இப்படியும் சொல்வர்.
7. நாய்க்குக் குட்டி என்பது போல பசுவுக்கு....
9. அறுசுவைகளில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

2. ஒரு பழ மரம்.
3. முகத்தில் ஆண்களுக்கு வளரும் முடி.
4. ஐந்தில் இருந்து இரண்டைக் கழிக்க வருவது.
5. ஒரு நிறம்.
7. ஆழி என்பதன் ஒத்த கருத்து.
8. கிழமையை இப்படியும் சொல்லலாம்.
9. வனம்.



## வார்த்தை விளையாட்டு - 10

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
செல்வி கனகசபாபதி சஞ்ஜீனோஸா
வேலணை கிழக்கு,
2ம் வட்டாரம்,
வேலணை.

*2ஆம் பரிசு -*
செல்வன் கணேசலிங்கம் தர்சிகன்
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

*3ஆம் பரிசு -*
செல்வன் அ.சஞ்ஜீவ்
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

### வார்த்தை விளையாட்டு-10 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
1. மன்னன் 9. நாய்
4. மடம் 10. கரம்
6. கதிரை
7. கொம்பு

**மேலிருந்து கீழ்**
1. மரங்குத்தி 5. அம்புலி
2. கடன் 8. புடைவை
3. ரோஜா 9. நாரை



# உங்கள் கைவண்ணம்



இ.கௌரிநிஷா,
தரம் - 10,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.



து.விதுஷன்,
தரம் - 3,
யாழ். இந்து
ஆரம்பப் பாடசாலை.

# பார் கோட்

சர்வதேச அளவில் பொருள்களை விற்பனை செய்ய உதவும் பொதுமொழியே 'பார் கோட்' ஆகும். பொருட்களை உள்ளடக்கிய பெட்டிகளில், சில நூல்களில் வரிக்குதிரையின் கோடுகள் போல் பட்டை பட்டையாக சில கோடுகளும், கோடுகளுக்கிடையே இடைவெளியும், சில எண்களும் காணப்படும். இதுவே 'பார் கோட்' (Bar code) எனப்படுகிறது. பொதுவாக, வெளிநாட்டுப் பொருட்களை பொதியிடப்பட்ட அட்டைகளில்தான் இத்தகைய 'பார் கோட்' இடம்பெற்றிருக்கும். தற்போது உள்நாட்டில் தயாராகும் பல்வேறு பொருள்களிலும் இக்கோடுகள் பரவலாகக் காணப்படுகிறது.

இக்கோட், விலை மற்றும் பொருளை அடையாளம் காட்டும் ஒரு பன்னாட்டுக் குறியீடு. சாதாரண நிலையில் இதைப்பார்த்து புரிந்து கொள்ள இயலாது. இதனைப் படிப்பதற்காக உருவாக்கப்பட்ட 'பார் கோட் ரீடர்' அல்லது ஸ்கானரால் தான் இதைப் புரிந்து கொள்ளமுடியும். இக்கருவிகள் - அக்கோட்களைப் படித்து அதனோடு விவரத்தை அனுப்புகிறது. என்ன பொருள்? யாரால், எங்கு, எப்போது தயாரிக்கப்பட்டது? அதன் அளவு மற்றும் விலை போன்ற விவரங்களை கணினி நொடியில் அச்சிட்டுத் தந்துவிடுகிறது. இதனால் விற்பனை வெகுசுலபமாக முடிந்துவிடுகிறது.

கணினி வழியாக விலையும், விற்பனையும் பதிவாகி விடுவதால், தினசரி விற்பனைத் தொகை மற்றும் சரக்கு இருப்பு விவரங்களை விற்பனை நிலையங்கள் எளிதாகக் கணக்கிட்டுவிடும். மொத்த, சில்லறை விற்பனையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பொருளின் முழுவிவரமும் எளிதாகக் கிடைப்பதால் உற்பத்தியாளர்கள் இந்த 'பார் கோட்' அடையாள முறைகளைத் தற்போது அதிகமாகப் பயன்படுத்திவருகிறார்கள்.

ISBN 1-903679-02-8

9 781903 679029 >

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் இந்த பார் கோட் பதிக்கப்பட வேண்டியது கட்டாயமானது. இந்த அடையாள முறை இல்லாத பொருடகள் மீது விற்பனையின்போது - அதிக கவனம் செலுத்த வேண்டும் என்ற விதி இருப்பதால், இக்குறியீடு இல்லாத பொருட்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தேசிய எண்ணிடும் அமைப்பு இருக்கும். ஒவ்வொரு நாடும் ஐ.ஏ.என். எனும் (International Article Numbering Association) அமைப்பிடம், தமக்கென ஒரு எண்ணைப் பெற்றிருக்கும். இந்த எண் இரண்டு அல்லது மூன்று இலக்கங்களைக் கொண்டதாக இருக்கும்.' பார் கோட்' கேட்டு விண்ணப்பிக்கும் நிறுவனங்களுக்கு இது தனித்தனியே நான்கு அல்லது ஐந்து இலக்க எண்களை அளிக்கிறது. உற்பத்திப் பொருட்களின் தன்மைக்கேற்ப எண்கள் தரப்படும். ஒரு உற்பத்திப் பொருளுக்கு 12 இலக்கங்கள் கொண்ட எண் அமையும். இதோடு 13 ஆவது இலக்கமாக 'செக் டிஜிட்' எனப்படும் ஒரு எண் தரப்படும்.

ஐ.ஏ.என். தவிர சில குறியீடுகளும் உள்ளன. என்றாலும், ஐ.ஏ.என். முறைதான் உலகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

## அன்புச் சிறார்களே!

உங்கள் ஆக்கங்களை சிறுவர் அரங்கத்தில் பிரசுரிக்கத் தயாராக இருக்கின்றோம். கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் மற்றும் துணுக்குகளை எமக்கு அனுப்பிவையுங்கள்.



சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

................ திகதி
.............................. ஒப்பம்

.......................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
.......................... பெற்றோர் ஒப்பம்

## பொது அறிவு

1. உலகின் சனத்தொகை கூடிய நாடு எது?
சீனா

2. தொலை நோக்கியை யார், எத்தனையாம் ஆண்டு கண்டு பிடித்தார்?
கலிலியோ கலிலி,
1609 ஆம் ஆண்டு

3. வியாழனின் பிரகாசமான உபகோள்கள் எவை?
அயோ, யுறோ, கனிமிட் கலிசுரோ.

4. உலகின் பனிக்கட்டிப் பிரதேசத்தில் அடங்கும் கண்டம் யாது?
அண்டாட்டிக்கா

வ. திவ்யா,
யாழ். மகாஜனாக் கல்லூரி.

## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
நோயல் டிலக்ஸ்சி
கற்கும் பாடசாலை :-
இளவாலை கன்னியர் மடம்.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், புத்தகங்கள் வாசித்தல்



முழுபபெயர் :-
ஜெயவீரசிங்கம் ஜீவகன்
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம், வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :-
சிவரூபி சோதிநாதன்
கற்கும் பாடசாலை :-
யா/கரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு, ஆங்கிலம்.



முழுப்பெயர்:-
சிவபாதம் வசீகரன்
கற்கும் பாடசாலை :-
கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
ரீ.வி. பார்த்தல், கதைகள் வாசித்தல்



முழுப்பெயர்:-
செல்வி சி.பிரியங்கா
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணக் கல்லூரி
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், சித்திரம், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :-
செல்வி.துவாரகா சிவகுமார்
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், சங்கீதம், தையல்,
கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல்

முழுபபெயர் :-
செல்வி பு.ஜனனி
கற்கும் பாடசாலை :-
யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை,
பொது அறிவை வளர்த்தல்

முழுப்பெயர் :-
செல்வி.சிவாணி உமாபதிசிவம்
கற்கும் பாடசாலை :-
யா/வட்டு மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், பத்திரிகை வாசித்தல்,
வானொலி கேட்டல்

முழுப்பெயர்:-
செல்வி.சசிரேகா குணசசிகரன்
கற்கும் பாடசாலை :-
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
கற்கும் தரம் :-9
ஆர்வமுள்ள துறைகள் :-
ரீ.வி. பார்த்தல், கணிதம்.

முழுப்பெயர்:-
ய.அலன்பீற்றர்
கற்கும் பாடசாலை :-
புனித பத்திரிசியார் கல்லூரி
கற்கும் தரம் :-7
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத் துறை, நாடகத்துறை,
முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகருகி ஒல்லைக்கெடும் - திருக்குறள்

## நமது நோக்கு

### உறவுக்கு முன் உரிமை வேண்டும்!

ஊடகவியலாளர்களுக்குரிய சுதந்திரமும் உரிமையும் மறுக்கப்படும் நாடுகளில் இலங்கைக்குத் தனியான இடம் உண்டு.

குறிப்பாக ஆயுதப்படையினராலும், பொலிஸாராலும், அரசாங்கத்தின் புலனாய்வுப் பகுதியினராலும்- ஊடவியலாளர்கள் பலவகையிலும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் / அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

துணிச்சலுடன் செயற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும்- படையினரும் பொலிஸாரும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தமை இவற்றுள் குறிப்பிடத்தக்கது.

ரிச்சாட் டீ சொய்ஸா, மயில்வாகனம் நிமலராஜன், 'சட்டன' பத்திரிகையாளர் றோகணகுமார போன்றோரின் படுகொலைகளுடன் -

இக்பால் அத்தாஸ் மீதான கொலைப்பயமுறுத்தல், மட்டக்களப்பில் டி.சிவராம், விஜயேந்திரன் மீதான தாக்குதல்கள், ஜி.நடேசன் வீட்டின் மீதான கைக்குண்டு வீச்சு, மன்னாரில் ஃபஸ்மி மீதான அச்சுறுத்தல், வவுனியாவில் மாணிக்கவாசகம் மற்றும் கொழும்பில் ஸ்ரீகஜன் கைது, யாழ்ப்பாணத்தில் வித்தியாதரன் மீதான அச்சுறுத்தல், 'ராவய'வின் உவிந்து குருகுலசூரியவின் மீதான தாக்குதல் எனத் தொடர்ந்து அண்மையில், நெல்லியடியில் ஐ.பி. சி. செய்தியாளர் தவச்செல்வம் மீதான தாக்குதல் வரை- ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளும், கொடுமைகளும் தணிந்தாகத் தெரியவில்லை.

ஊடகவியலாளர்கள் துணிச்சலுடன் நீதியின் பக்கம் நின்று செய்திகளை வெளியிடுவதற்கு - படையினர் தரப்பில் நிலவிவரும் நெருக்குதலும் அடாவடித்தனங்களும் கொஞ்சமேனும் குறைவுறாத நிலையில் -

பொலிஸ் மா அதிபரின் புதிய அறிவித்தலொன்று, அவரது நோக்கம் எதுவாக இருந்தபோதும், ஊடகவியலாளர்களைப் பொறுத்த வரையில்- பயமுறுத்தலுக்கான ஆரம்பப்படியோ எனச் சந்தேகம் கொள்ளதக்க வகையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு பிரதேசரீதியாகவும், அவ்வப்பகுதிகளில் வசிக்கும் ஊடகவியலாளர்களின் விபரங்களையும், முகவரியையும் திரட்டிக் கொள்வதற்கு - பொலிஸ் மா அதிபர் - அவ்வப்பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு சுற்றறிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸாருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையே நல்லுறவை வளர்க்கும் வகையில் - எப்போதும் தொடர்பு கொள்ளத்தக்கதாக, இந்த விபரங்கள் திரடடப்படுவதாக அவர் கூறியபோதிலும் - இவ்வாறான தகவல்களை அளிப்பதற்கு ஊடகவியலாளர்கள் முன்வராததோடு, தமது தரப்பின் அச்சத்தையும் சந்தேகங்களையும் வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் - உண்மையில், ஊடகவியலாளர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள விரும்பினாலும் - இன்றுவரை கிடைக்கும் அனுபவங்கள் - நல்லுறவுக்கு எவ்வகையிலும் உதவக் கூடியதாக இல்லை என்பதே யதார்த்தம் ஆகும்.

ஒரு நாட்டினைத் தாங்கி நிற்கும் நான்காவது தூணெனவும், நாட்டில் நடக்கும் அராஜகங்களைக் கண்காணிக்கும் காவல் நாயெனவும் வர்ணிக்கப்படும்- ஊடகவியலாளர்களின் பணியின் பெறுமதியையும் அவசியத்தையும் உணராதவர்களாகவே படையினர் நடந்துவரும் நிலையில்- 'நல்லுறவை' பேணப் பொலிஸ் மா அதிபர் விரும்புவாராயின், முதலில் ஊடகவியலாளர்களின் பணிக்குரிய சுதந்திரத்தையும் உரிமைகளையும் வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

இல்லாதுவிடில், ஒருபுறம் ஊடகவியலாளர்கள் மீதான குறிவைத்துத் தாக்குதல்கள் இடம்பெறும் போது- மறுபுறம், நட்புறவின்பேரில் ஊடகவியலாளர்களின் பெயர் விபரங்களைத் திரட்ட முனைவதென்பது, அச்சுறுத்தலுக்கான வழிவகைகளை இன்னமும் இலகுவாக்கிவிடும் என ஊடகவியலாளர்கள் அஞ்சுவதையே இன்னமும் உறுதிப்படுத்திவிடும்.

# தற்போது முன்வைக்கப்பட்ட சமஷ்டிக்கும் தனி நாட்டுக்கும் வேறுபாடு இல்லையாம்!

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்



(கொழும்பு)

புலிகள் சமஷ்டி தொடர்பாக அறிவித்துள்ள தீர்வில் சில விடயங்கள் மறைமுகமாக இருப்பதாகவும், இது குறித்து அவசியம் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போது அவர் -

புலிகள் தற்போது அறிவித்துள்ள சமஷ்டிக்கும் - தனி நாட்டுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை.

புலிகளின் ஆயுதங்களைக் களைவதே இன்றுள்ள முக்கிய தேவையாகும். புலிகளின் ஆயுதக்களைவு இடம்பெறாத எந்தவொரு தீர்வையும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்றுக் கொள்ளாது.

புலிகள் தொடர்ந்து ஆயுதப் பயிற்சி பெற்று வருகின்றார்கள். இவற்றையெல்லாம் மக்கள் முன்பு தெளிவுபடுத்துவது எமது கடமை என லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மட்டக்களப்பு சிறைச்சாலையில்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் ஒன்பது பேர் தடுத்துவைப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகிய ஒன்பது பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாக சிறைச்சாலை அத்தியட்சகர் குணசேகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில், புாந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது 76 பேர் பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் அநேகமானோருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் இவர்களில் 67 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தில் இவர்கள் மீதான வழக்குகளை சட்ட மா அதிபர் வாபஸ் பெற்றதாலும், சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரிலும் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து ஒன்பது பேர் மட்டுமே இப்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என சிறைச்சாலை அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வன்னி ஒலிபரப்புச் சேவையை மீளத் தொடங்க நிர்ப்பந்தம்!

### எதிர்க்கட்சிகள் அரசிடம் முன்வைப்பு

(கொழும்பு)

வன்னி ஒலிபரப்புச் சேவையை மீளத் தொடங்குமாறு எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

புலிகளின் குரல் வானொலி மூலம் வன்னிப்பகுதியில் ஒலிபரப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது அரசின் செயற்பாட்டுகளுக்கும் படையினரின் செயற்பாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுகின்றது. வன்னி ஒலிபரப்பு சேவை இருந்த போது படையினரினது பொழுது போக்குகளுக்கு அது பெரும் துணையாக இருந்தது. இது கடந்த மார்ச் 31ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுவிட்டது.

இது புலிகளுக்கு மிகுந்த சந்தோசத்தை ஏற்படுத்தியிருக்கிறது. படையினருக்காக பிறேமதாஸவே இந்தச் சேவையை ஆரம்பித்தார். இதை ரணில் அரசாங்கம் நிறுத்திவிட்டது. யுத்த முனையிலுள்ள படையினருக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பு சாதனமாக இருந்து வந்த வன்னி ஒலிபரப்பை மீளத்துவங்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

இதே வேளை இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அனுரா பண்டாரநாயக்க - புலிகள் தமது வானொலியின் ஒலிபரப்புத் தரத்தை உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும், வவுனியா இராணுவப் பிரதேசத்தில் புலிகளின் வானொலி ஒலிபரப்பாவது படை யினருக்குப் பெரும் இடையூறை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

# இரவு நேரப் போக்குவரத்தை அனுமதிக்க முகமாலைக்கு மின்சாரவசதி தேவையாம்!

### சோதனைக்கு அவசியம் என்கிறது படைத்தரப்பு

முகமாலையூடான போக்குவரத்தை இருபத்து நான்கு மணி நேரமும் அனுமதிப்பதாயின் முகமாலையில் எமக்கு மின்சாரவசதி செய்துதரப்படவேண்டும் என்று படை அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ-9 வீதியூடாக இரவு நேரத்தில் முகமாலைப் பகுதிக்கு வரும் பொது மக்களைச் சோதனை செய்வதற்கு அப்பகுதியில் தற்போது மின்சார வசதி எதுவும் இல்லை. எனவே, முகமாலையில் மின் பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டு மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே தம்மால் அப்பகுதியில் பொதுமக்களைச் சோதனையிடும் கடமை யைச் செய்யமுடியும் என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இவற்றைவிட இரவுக்கடமையில் ஈடுபடுவதற்கு சர்வ தேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளும் முன் வருகிறார்கள் இல்லை. எனவே, முகமாலையூடான ஏ-9 பாதையில் மக்கள் இரவுப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

இதேவேளை, மேற்படி பாதையூடான பொதுமக்களின் போக்குவரத்துக்காக 24 மணி நேரமும் முகமாலைச் சோதனை நிலையத்தில் கடமையாற்றுவதற்கு தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஐஸ் தொழிற்சாலையிலுள்ள படைமுகாமை அகற்றுக !

### களுவன்கேணி மக்கள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காவற்கேணி ஐஸ் தொழிற்சாலையில் முகாம் அமைத்துள்ள படையினரை அங்கிருந்து வெளியேறுமாறு காவற்கேணி கடற்தொழிலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இதுதொடர்பாக மட்டக்களப்பு இராணுவத் தலைமையகத்துக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியிலுள்ள 1252 மீனவக் குடும்பங்களிலும் தொழிலுக்கு இந்த ஐஸ் தொழிற்சாலை ஆதாரமாக இருந்து வந்திருக்கிறது. நோர்வேயின் உதவியுடனான இந்த தொழில்கள் 12 வருடங்களாக இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனுள் பிள்ளையார் ஆலயம் ஒன்றும் உள்ளது.

படையினர் நிலை கொண்டிருப்பதால் தொழிற்சாலையின் உபகர ணங்கள் சேதமடைந்து போயிருப்பதாகவும் இதனால் காவற்கேணி மீனவர்களின் நலனுக்காக இங்குள்ள படைமுகாமை அகற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

## புலிகளுக்கு சம அந்தஸ்த்தா? சுவிஸ் அரசு மீது பாய்ச்சல் !

### சிங்கள அமைப்புக்கள் கடிதம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துடன் புலிகளுக்கு சம அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும் என சுவிஸர்லாந்து அறிவித்தது தொடர்பாக, சிங்கள அமைப்புக்களின் தேசிய கூட்டுக்குழு கண்டனக் கடிதம் ஒன்றை சுவிஸ் நாட்டுக்கான தூதுவருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புலிகளைச் சம அந்தஸ்துடன் வைத்து நோக்கியமை- சர்வதேச பயங்கரவாத அமைப்பாக கருதப்படும் புலிகளுக்கு அங்கீகாரம் வழங்கியதாகக் கருதத்தோன்று கின்றது.

அத்துடன், கேணல் கருணாவை, சுவிஸ் அரசாங்கம் கிழக்குப்பகுதிக்கான இராணுவத்தளபதி (Military Commander of Eastern Srilanka) என தனது உத்தியோகபூர்வ செய்திக்குறிப்பில் குறிப்பிட்டிருப்பதும் கண்டிக்க வேண்டியது. இது சர்வதேச சட்டதிட்டங்களை மீறும் செயலாகும்.

சுவிஸ் அரசாங்கத்தின் செயற்பாடுகள் நடைமுறைத் தன்மையில் இருந்து நழுவிச் சென்றுகொண்டு இருக்கின்றது. சுவிஸ் நாட்டின் நெறிமுறையற்ற செயற்பாடுகள் சிங்கள மக்களின் மனதைப் புண்படுத்து கின்றதுடன். அவர்களின் கருத்துக்களையும் அலட்சியப் படுத்துகின்றது என சுவிஸ் தூதுவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதேவேளை- அண்மையில் சுவிஸ் சென்றிருந்த விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் அங்கு நடாத்திய பேச்சுக்கள் தொடர்பாக , சுவிஸ் வெளிவிவாகர அமைச்சு வெளியிட்ட உத்தியோகபூர்வ செய்திக்குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# குரங்கு பிடிக்கப் போய் பிள்ளையார் ஆன கதை



ஒரு விடயத்தை விரைவாகச் செய்து முடிப்பதற்கு, அதற்குச் சார்பாகச் சிந்தித்துச் செயற்படுபவர்கள் மட்டுந்தான் உதவுவார்கள் என்றில்லை. அந்த விடயத்துக்கு எதிரான சிந்தனையுடைய, அதனை எப்படியும் தோற்கடித்துவிட வேண்டும் என்ற வேகத்தில் செயற்படுபவர்களும்கூட அதன் வெற்றிக்கு பெரும் பங்களிப்புச் செய்யமுடியும். இது, இவர்கள் ஒன்று நினைக்க, அது இன்னொன்றாக முடிவதால் வருவது என்றாலும், இந்த எதிர்நிலைநோக்குச் செயற்பாடுகளில் அனுகூலங்களும் உண்டு.

சரியாகச் சிந்தித்துச் செயற்படுபவர்கள் எந்தக் காரியத்திலும் எழும் இத்தகைய எதிர்நிலைச் செயற்பாடுகளைத் தமக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டு விடுவர். எமது ஈழப்பிரச்சினை தொடர்பிலும் இத்தகைய ஒன்று நடந்து முடிந்துள்ளது. சமாதானத்துக்கு எதிரான சக்திகள், அதனை முறியடிக்க மேற்கொண்டுவந்த தளராத முயற்சிகள், அவர்களே எதிர்பாராத - சமாதானத்துக்குச் சார்பானவையாக அமைந்து விட்டவற்றையே நான் இங்கே நோக்க விளைகிறேன்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஒரு போர்நிறுத்தமும், அமைதி முயற்சிகளும் தோன்றும் வாய்ப்பு ஜனாதிபதி சந்திரிகாவின் கையில் முழு அதிகாரமும் இருந்த காலத்திலேயே - அதாவது அவரது கட்சியே பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருந்த காலத்திலேயே உருவானது. ஆனால் அப்போது அதை அவர் சரியாகப் பயன்படுத்தி, தனது ஆட்சியையும் அதன்மூலம் தக்கவைக்கத் தவறிவிட்டார்.

உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் புலிகள் பெற்றுவிட்ட தவிர்க்கமுடியாத இடத்தையும், புதிய சர்வதேச ஒழுங்



விமல் வீரவன்ச

கினையும் சரியாக மதிப்பிட்டுத் தனது செயற்பாடுகளை அவர் மேற்கொள்ளாததாலேயே அவருக்கு இந்த நிலை ஏற்பட்டது எனலாம்.

இத்தகைய சரியான திட்டமிடலற்ற நகர்வுகளால் அவரது கை நழுவிப்போன பாராளுமன்ற ஆட்சி அதிகாரம், ஐக்கிய தேசிய முன்னணியின் கையில் கிடைத்ததும், மிக நீண்டகாலத்துக்குப் பின்னர் தமக்குக் கிடைத்த அந்த வாய்ப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சரியாகப் பயன்படுத்திக்கொண்டார் எனலாம்.

புலிகள் வழங்கிய சமாதான வாய்ப்பையும், சர்வதேச அளவில் அதற்கு ஆதரவாக எழுந்த உணர்வலைகளையும் ரணில் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு, தனது ஆட்சியை அதன்மூலம் ஸ்திரப்படுத்தத் தொடங்கினார். ஆனால், ஜனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்பட்டதன் மூலம், தனது தளத்தைத் தொடர்ந்தும் பலவீனப்படுத்திக் கொண்டே இருந்தார். அவரது இந்தச் செயற்பாடுகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோடுவதுபோல உடனடியாகத் தென்பட்டாலும், நீண்டகால நோக்கில் சமாதான முயற்சிகளை துரிதப்படுத்தவே அவை உதவின.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை சிறிலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகள், முதலில் வலுப்படுத்தப்பட்டது, இரு தரப்புக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்தப்



புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலமாகும்.

இத்தகைய ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் நோர்வேத் தரப்பு ஈடுபட்டு, அந்த உடன்படிக்கை இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டதும், ஜனாதிபதி சந்திரிகா அந்த உடன்படிக்கைக்குத் தனது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினார். இந்நிலையில் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இந்த உடன்படிக்கை யில் கைச்சாத்திடுவதாக இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், தலைவர் பிரபாகரனும் அதற்கு முன்னதாகவே உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுக்கொண்டனர்.

இத்தகைய ஒரு எதிர்ப்பு முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்டதால், முன்னதாகவே உடன்படிக்கையில் தலைவர் பிரபாகரன் கைச்சாத்திட்டு, அதனை நோர்வேத் தூதுவரிடம் கையளிக்க, வவுனியாவில் வைத்து அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒப்பமிட்டார். இவ்வாறுதான் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அரசு - புலிகள் போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் எதிர்பார்த்ததைவிட விரைவாகவே ஏற்படுத்தப்பட்டது.

### தடைநீக்க விவகாரம்

இந்தப் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் சாதகமான பலாபலன்களால் மேலும் வலுப்பெற்ற சமாதான முயற்சிகள், அடுத்தகட்டமாக பேச்சு முயற்சிகளை நோக்கி நகர்ந்தபோது, அதற்குப் பிரதான தடையாக இருந்த விடயம், முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவினால் விதிக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையாகும்.

இந்தத் தடையை நீக்குவது தொடர்பில் அரசாங்கம் சாதகமாகச் செயற்படத் தொடங்கியதும், ஜனாதிபதி சந்திரிகா அதற்கெதிரான தனது எதிர்ப்பைக் கடுமையாகத் தெரிவித்து வந்தார். தடைநீக்க உத்தரவை முப்படைகளின் தளபதியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமான சந்திரிகாவே அறிவிக்கமுடியும் என்கின்ற சட்டச் சிக்கல் தோற்றுவிக்கப்பட்டது.

இந்நிலையிலும், தடையை நீக்குவதாகத் தான் அறிவித்த திகதிக்கு முன்னதாவே, பாதுகாப்பு அமைச்சருக்கு இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி, புலிகள் மீதான தடையை நீக்குவதாக அறிவித்தது அரசாங்கம். இது சந்திரிகா ஒன்று நினைத்துச் செய்து முடித்த மற்றொரு சாதகமான காரியமாகும். இதனைத் தொடர்ந்து அவர் இடைக்கால நிர்வாகம் தொடர்பான சட்டச் சிக்கல்களைத் தோற்றுவிக்கத் தொடங்கினார். இந்த விடயங்களில் இவருக்குத் துணையாக, அவர் சார்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணியுடன், ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கடும்போக்கு இனவாதக் கட்சிகளும் செயற்பட்டுவந்தன.

### இடைக்கால நிர்வாகம், கூட்டுச் செயலணி விவகாரம்

நோர்வே அரச பிரதிநிதிகளின் அனுசரணையுடன், தாய்லாந்தில் தொடங்கிய பேச்சுவார்த்தைக ளில், இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயங்கள் ஆராயப் படவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், இடைக்கால நிர்வாகம் என்கின்ற பதம் தென்னிலங்கையில் ஏற்படுத்திவரும் குழப்பங்களையடுத்து, இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்கள் கைவிடப்பட்டன. அதற்கு மாற்றாக அதிலும் குறைந்த அதிகாரம் கொண்டது போலத் தென்படும் விசேட கூட்டுச் செயலணி ஒன்றை இருதரப்பும் இணைந்து அமைப்பது என்று முடிவானது. ஆனால், இதற்கும் தென்னலங்கையில் எதிர்ப்புக்கள் முடுக்கி விடப்பட்டன. இந்தச் செயலணி வடக்கு - கிழக்குக்கு மட்டும் அனைத்தையும் அள்ளி வழங்கப்போவதாக பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டன.

இதற்கு அடுத்ததாக, எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் வகையில், இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தல், புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்தல், அரசியல் தீர்வுக்கான வழிவகைகளை ஆராய்தல் என மூன்று இலக்குகளை எட்டுவதற்கான தனித்தனி உபகுழுக்களை அமைப்பது என ஒஸ்லோவில் வைத்து முடிவானது. அதன்படி உபகுழுக் கூட்டங்களும் நடைபெறத் தொடங்கின. இது எதிர்பார்த்ததை விடக் கூடுதல் பயன்களைத் தருவதாக அமைந்திருந்தது.

### புதிய சதி முயற்சிகள்

இதனிடையே இந்தச் சமாதானப் பேச்சுக்களைக் குழப்பக் கூடியதாக மற்றுமிரு சதித்திட்டங்களும் முடுக்கிவிடப்பட்டன. அதிலொன்றுதான், தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிராக சிறிலங்காவின் மேல்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பாகும். முதற்தடவை யாக வன்னியிலிருந்து சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல், படைத்துறை முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் ஒஸ்லோவில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாக இருந்த சமயத்தில், பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு ஒருசில மணி நேரங்களுக்கு முன்னதாக கொழும்பு மேல்நீதி மன்றம், தலைவர் பிரபாகரன் மீதான இருநூறாண்டுச் சிறைத்தண்டனைத் தீர்ப்பை அறிவித்தது.

இந்தத் தீர்ப்பு சமாதானப் பேச்சு முயற்சிகளுக்கு பெரும் இடையூறு விளைவிக்கும் என எதிர்பார்க்கப் பட்டபோதும், அது நேர்மாறான விளைவையே ஏற்படுத்தியது. இத்தகைய சதிக் குழப்பமுயற்சிகளுக்கு எதிரான பாதுகாப்பு உத்தரவாதத்தை முன்னையை விட அதிகமாக சிறிலங்கா அரசாங்கம் புலிகளுக்கு வழங்கி, சமாதான முயற்சிகளில் மேலும் நம்பிக்கையூட்டினர். அதாவது சமாதானத்துக்கு எதிரான இந்தச் சதிமுயற்சிகளே, சமாதான முயற்சிகளை வெற்றிபெறச் செய்வதற்காக இரு தரப்பையும் மிகவும் நெருக்கமடையச் செய்தது எனலாம்.

இதேபோன்று மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு சதிமுயற்சியே முஸ்லிம் காங்கிரசுக்குள் ஏற்படுத்தப்பட்ட பிளவாகும். ஒஸ்லோவில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறவிருந்த சமயத்தில் வெளியான நீதிமன்றத் தீர்ப்பைப்போல, மூன்றாம் சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாக இருந்த சமயத்தில், முஸ்லிம் காங்கிரசுக்குள் பிளவு தூண்டப்பட்டு, பேச்சுக்களில் முக்கிய பங்காளியாகக் கலந்திருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒஸ்லோவிலிருந்து இடையில் திரும்பவேண்டியதாகிவிட்டது. இத்தகைய ஒரு நெருக்கடி நிலையை தோற்றுவித்து, அரசு புலிகள் பேச்சுமுயற்சிகளில் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டுவந்த ஹக்கீமை பேச்சுமேடையிலிருந்து நீக்கி - முஸ்லிம்களின் சார்பில் ஒரு கடும்போக்காளரை பேச்சுக்களுக்கு அனுப்பி மேலும் சிக்கல்களைத் தோற்றுவிப்பதே இந்தச் சதியின் அடிப்படை நோக்கமாகும்.

ஆனால், இந்தச் சதியும் சில சாதகமான விளைவுகளையே ஏற்படுத்திவிட்டது. அதாவது பேச்சின் பிரதான இரு தரப்புக்களான சிறிலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வேறெந்தப் புற அழுத்தங்களும் இல்லாத ஒரு சூழலில், இம்முறை தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் தெரிவிக்கப்பட்ட தன் பிரகாரம், பிரதேச சுயாட்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வினை எட்டுவதற்கு இணக்கம் கண்டுள்ளன. இது இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனையாகவும் அமைந்து விட்டது.

ஆக, புலித்தடை நீக்கத்துக்கு முட்டுக்கட்டை, இடைக்கால நிர்வாகத்துக்கு எதிர்ப்பு, கூட்டுச் செயலணிக்குழு அமைப்புக்கு எதிர்ப்பு எனச் சின்னச் சின்ன விடயங்க ளில் காட்டப்பட்டுவந்த எதிர்ப்புக் களே, இந்த சிறிய, காலந்தாழ்த் தக்கூடிய வழிமுறைகளை விட்டு, நேரடியாக ஒரு நிரந்தரத் தீர்வை நோக்கி நகரவேண்டிய நிர்ப்பந் தத்தை அரசாங்கத் துக்கு ஏற் படுத்தி, சமாதானத் தீர்வு முயற்சி களைத் துரிதப்படுத்தியுள்ளன எனலாம்.

இவ்வாறுதான் சமாதானத்துக்கு எதிரான சிங்கள - தமிழ்க் கூட்டுக்கள் பிடிக்க முயன்ற குரங்கு, சமஷ்டித் தீர்வு என்கின்ற பிள்ளையாரை விரைவாகப் பிடிக்கும்படி செய்துவிட்டுள்ளது. இவர்களுக்கும் நன்றிசொல்லத்தானே வேண்டும். ★

— சடாயு.



## படமும் செய்தியும்



"தேவானம்" இசை ஒலிப்பேழையினை பாடலாசிரியர் யோசப் பாலாவிடம் இருந்து மட்டு - திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பெறுவதையும் அருகில் கலாநிதி அன்ரன் மத்தாயஸ், அருட்திரு வின்சன் பற்றிக் அடிகளாரும் காணப்படுகின்றனர்.



புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த 18 வருடங்களாக சேவையாற்றிய திருமதி இ.வேலாயுதம் ஆசிரியைக்கு சேவை நலன் பாராட்டுவிழா, பாடசாலைச் சமூகத்தில் அண்மையில் நடைபெற்றது. (83)

### வானொலிச் சாதனங்கள் வழங்கியதால்

# நோர்வேயின் நடுநிலையில் சந்தேகம் என்கிறார் அமுனுகம

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நோர்வே அரசாங்கம் வானொலித் தொடர்புக் கருவிகளை வழங்கியிருப்பது, நோர்வே அரசாங்கத்தின் மீதான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வாராந்த கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நோர்வேயின் நடுநிலை மீது சந்தேகம் எழுந்துள்ளது. புலிகளுக்கு தொடர்பு சாதனங்களை வழங்கியிருப்பது நடுநிலையான, புத்திசாலித்தனமான நடவடிக்கையல்ல. இது தொடர்பான சர்ச்சைகள் தோன்றிப் பல நாட்களாகியும் இலங்கை அரசோ, நோர்வேயோ இதுவரை எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை.

இது இலங்கையின் சட்டதிட்டங்களை மீறும் செயல். அத்துடன், இந்தியா - இலங்கை உடன்பாட்டுக்கும் இது முரணானது. இந்திய நலன்களைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் முன்பாக இந்தியாவுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற விதி மீறப்பட்டுள்ளது என சரத் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் ஹக்கீமுக்கு எதிரான மனு மேன் முறையீட்டு நீதிமன்று தள்ளுபடி

(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீமை சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் தலைவராகச் செயற்படுவதை தடுக்குமாறு தடை உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அண்மையில், ஹக்கீம் தலைவராகச் செயற்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மாவட்ட நீதிமன்றம் நீக்கியிருந்தது. அதற்கெதிராக, எஸ்.சுபைர்தீன் உள்ளடங்கலாக 13 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மனுவை ஆராய்ந்த பின்னர், மீண்டும் தடை உத்தரவைப் பிறப்பிக்க முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த மனுவை தொடர்ந்து விசாரிப்பதற்கு அனுமதி வழங்குவதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்கு, பெப்ரவரி 7ஆம் திகதி முடிவெடுக்க இருப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள் இருதரப்பினரும் முன்வைத்த கருத்துக்களை ஆராய்ந்த பின்னரே, ரவூப் ஹக்கீம் தலைமைத்துவத்தின் மீதான தடை உத்தரவை மாவட்ட நீதிமன்றம் நீக்கியதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி காமினி அமரதுங்க கூறியுள்ளார்.

## சவூதிக் கடலில் தத்தளித்த 77 இலங்கையர்கள் மீட்பு

(கொழும்பு)

சவூதி அரேபியாவுக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த கப்பல் ஒன்றில் இருந்து இலங்கையைச் சேர்ந்த 77 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அந்த நாட்டின் கரையோரக் காவற்படையினர் இவர்களை மீட்டதாக அறிவிக்கப்படுகின்றது. இந்தக்கப்பல் 'புளூஸ்ரார் மரீன்' என்ற பெயரைக் கொண்டது என அறிவிக்கப்படுகிறது.

செங்கடலுக்குச் செல்ல முன்னர் சர்வதேச கடற்பரப்பில் எட்டு நாட்களாக அது தத்தளித்துக் கொண்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரதம நீதியரசருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு

### நீதிபதிகள் சங்கம் தாக்கல்

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிராக நீதிபதிகள் சங்கம் அடிப்படை உரிமை மீறல் வழக்கினைத் தாக்கல் செய்துள்ளது.

நீதிபதிகள் சங்கத்தின் 60 ஆவது மாநாட்டைக் குழப்புவதற்கு, பிரதம நீதியரசர் முனைந்தார் என- இவர் மீது அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக நீதிச் சேவை ஆணைக் குழுவுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கில் நீதிபதிகள் சங்கத்தை அவதூறு செய்தார் என்ற குற்றச்சாட்டும் குறிப்பிட்டுள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிரான இந்த வழக்குக்கு, சட்டத்தரணிகள் சங்கமும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

## வடக்கு புன்னாலைக்கட்டுவனில் மீளக்குடியமர அனுமதியில்லை

வடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு, வடக்குப்பக்கமாக மக்கள மீளக் குடியமரவும், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் படையினர் அனுமதி மறுத்துவருகின்றனர்.

இதுசம்பந்தமாக- ஜனாதிபதி, பிரதம மந்திரி, கண்காணிப்புக்குழு, மனித உரிமை ஆணைக்குழு ஆகிய தரப்பினருக்கு அப்பிரதேச மக்கள் மகஜர் மூலம் தெரியப்படுத்தி உள்ளனர்.

சம்பந்தப்பட்டோர் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து, தமக்குச் சாதகமான பதில் கிடைக்குமா? என அங்குள்ள மக்கள் கவலை கொணடுள்ளனர். (96)

## இரசாயனங்களால் பழுக்கவைத்து பழங்கள் சந்தையில் விற்பனை

(நாவற்காடு)

இரசாயன மருந்துகளால் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள் சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் விற்பனையாகி வருகின்றன.

இம் மாம்பழங்களை உண்பதால்- பல்வேறு நோய்களுக்கு உட்படக் கூடுமென்றும், இது சம்பந்தமாக சுகாதாரப் பகுதியினர் அக்கறை செலுத்த வேண்டுமென்று அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மண்கும்பான் வீதியை மேவி குறுக்கறுத்துப் பாயும் வெள்ளம்

(மண்கும்பான்)

குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக அல்லைப்பிட்டிக்கும் மண்கும்பானுக்கும் இடையில் உள்ள வீதியில்- வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால், இவ் வீதியூடான போக்குவரத்துப் பணிகள் பாதிப்படைநதுள்ளன. இதனால் சுமார் 1கி.மீ தூரத்தைக் கடக்க வேண்டிய பயணிகள், இரண்டரைக் கி.மீ தூரம் சுற்றியே பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

உள்வீதி திருத்தப்படாதிருப்பதாலும், இவ் வீதியிலுள்ள பாலங்கள் சேதமடைந்து இருப்பதாலும்- வீதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

## எழுதுவினைஞர் பரீட்சை இன்று

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் பரீட்சை இன்று சனிக்கிழமை இலங்கை முழுவதும் நடைபெறுகின்றது. யாழ். குடாநாட்டில் 69 பரீட்சை நிலையங்களில் 7000 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். (72)

## நிரந்தர வைத்திய அதிகாரி நெடுந்தீவில் நியமிக்கக் கோரிக்கை

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு நிரந்தரமாக ஒரு வைத்திய அதிகாரியை நியமிக்க பிரதேச செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, மாவட்ட வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்துக்குச் சமூகமளித்திருந்த- வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதான வீதியில் மீதமாகவுள்ள குறைவேலைகளை பூர்த்தி செய்து தருவதாகக் குறிப்பிட்டார். -

இதேவேளை- விரைவில் குமுதினிப் படகை சேவையில் ஈடுபடுத்த, முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## துண்டி மயானத்தில் மிதிவெடி அச்சம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டி மயானம் மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டபோதும், மிதிவெடிகள் காரணமாக மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு அஞ்சுகின்றனர்.

அம்மயானத்தில் இறுதிக் கிரியைகள் செய்வதற்கு, கொழும்புத்துறை இராணுவ அதிகாரியின் முன்னனுமதி பெறவேண்டியுள்ளதென்றும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## அதிபர்கள் சங்கக் கூட்டம்

வடமாகாண அதிபர்களின் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு, வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## யாழ்.திறந்த பல்கலைக்கழகம் அடுத்த ஆண்டு தரமுயரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையம் அடுத்த வருடம் தொடக்கம் தரம் உயர்த்தப்பட்டு, தென்னிலங்கையிலுள்ள திறந்த பல்கலைக்கழகங்களில் உள்ள- பயிற்சி நெறிகள் மற்றும் பட்டப்படிப்புக்கள் போன்றவற்றை ஆரம்பிக்கவுள்ளதாக மேற்படி நிலையத்தின் பிராந்திய இணைப்பாளர் ஞானேந்திரன் தெரிவித்தார்.

தற்போது இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இந்நெறிகளுக்கு 500க்கு மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (96)

## வாடகை செலுத்தப்படாத கடைகள் மாநகரசபையிடம்

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமாகவுள்ள கடைகளின் உரிமையாளர்களில், இதுவரை- வாடகை நிலுவை செலுத்தப்படாதவர்களின் கடைகளைப் பூட்டி, யாழ். மாநகரசபை பொறுப்பேற்கவுள்ளதாக தெரிவிக்கபபடுகிறது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு இறுதி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், வாடகை நிலுவையாக பல ல்ட்சம் ரூபா இவர்கள் செலுத்த வேண்டியுள்ளதாகவும், மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (13)

## இன்றைய நாள் இனிய நாள்

**14.12.2002 - சனிக்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 28 ஆம் திகதி**

*திதி* :- பூர்வபட்ச தசமி மாலை - 5.14 வரை அதன் மேல் ஏகாதசி

*நட்சத்திரம்* :- ரேவதி - இரவு - 8.44 வரை, அதன் மேல் அச்சுவினி.

*மரணயோகம்*:- இரவு - 8.44 வரை

**மேடம்** :- உடனலக்குறைவு, அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், மனச்சஞ்சலம், வீண்செலவு, கல்விச் சமநிலை, வியாபாரம் சமநிலை.

**இடபம்** :- தெய்வ சேவை, சமய அறிஞர் தொடர்பு, பெண்கள் மகிழ்ச்சி, செய்தொழில் லாபம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மிதுனம்** :- சமய/சமூக சேவையில் மதிப்பு, மக்களால் மதிக்கப்படுதல், தொழில்/புதிய தொழில் ஆகியவற்றில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- பிதாவுடன் மகிழ்வு, மனஉற்சாகம், எதிரிமௌனம், தெய்வவழிபாடு, கல்விச் சமநிலை, வியாபாரம் முன்னேற்றம்.

**சிங்கம்** :- உடனலக் குறைவு, புதிய காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கன்னி** :- மனத்தில் பெரும் போக்கு, பெண்கள் மனதில் மகிழ்ச்சி தவழுதல், புதிய ஆடைகள் கொள்வனவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**துலாம்** :- நோய் குணமடைதல், பணவரவு, புதிய கடன்கள், எடுத்த காரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**விருச்சிகம்** :- உற்சாகம், சமய/சமூக சேவையில் புகழ், புத்திரர் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**தனு** :- வீட்டில் உள்ளவர்களுக்கு உடனலக்குறைவு, வைத்தியச் செலவு, வீட்டில் செலவு, வாகனச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- மனதில் உற்சாகம், எடுத்த காரியம் வெற்றி, ஆடையாபரண பலன், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- மனச்சஞ்சலம், வரவுக்கு மிஞ்சிய செலவு, வாக்குவாதம், அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மீனம்** :- மனத்தில் குறை, பணவரவு, நண்பர்கள், உறவினர் வரவு, விருந்துபசாரம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசும் புலிகளும் மாதாந்தம் பேச்சு

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மாதம் ஒரு முறை பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். தாய்லாந்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில், அது குறித்த இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். சமாதானப் பேச்சுவார்த்தையில் காணப்படும் இணக்கப்பாடுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும், நடைமுறைப் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்காகவுமே, மாதம் ஒரு முறை சந்திப்பது எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகள், ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மாத்திரமே இடம்பெறும் என்றும் தெரிவித்த அவர், வேறு பல விடயங்களை அரசாங்கமும் புலிகளும் தொலைபேசி மூலமாகவும் பேசித் தீர்ப்பதற்கும் இணங்கியிருக்கின்றன. அதேவேளை- இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மற்றுமொரு கூட்டம், ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறும் என்றும் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

## ஆயுதங்களை...

பேசுவதற்கு மிகச் சமீபத்திலேயே இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது. அந்தப் பேச்சுக்களை ஆரம்பித்தால் எப்போது பூர்த்தியடை யும் எனக் கூறமுடியாது. அதில் வாத ப் பிரதிவாதங்களும் ஏற்படலாம். சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வது இலகுவான காரியமல்ல. இந்நிலையில் புலிகள் ஆயதங்களை கைய ளிக்க வேண்டும் என நாம் கோரி க்கை விடுவது மடமைத்தனமா னது. தமது பிரச்சினைக்கு இறுதித் தீர்வு ஏற்படாமல், அவ்வாறு உல கின் எந்தவொரு நாட்டிலும் உள்ள கெரில்லா இயக்கமும் கூட ஆயுதங்களைக் கையளித்தது இல்லை. ஆனால், பொ.ஐ.மு அவ்வாறு கூறுவது பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கே என்று குற்றம் சாட்டிய அமைச்சர்- அவர்கள் எதிர்பார்ப்பது போன்று, பேச்சுவார்த்தை முறிவடைவதற்கு எந்த வகையான சந்தர்ப்பமும் இல்லை என்றும் கூறினார். சர்வதேச நாடுகளின் கவனிப்புடன் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறுகின்றது என்பதை பொ.ஐ.முவிற்கு தான் கூறிவைப்பதாகவும் தெரிவித்த அமைச்சர்- விடுதலைப் புலிகளை சம அந்தஸ்த்தாக கருதிப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய தேவை இருப்பதாகவும் சுட்டிக் காட்டினார். விடுதலைப் புலிகளும் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்கள் ஒரு அமைப்பாகச் செயற்படுவதால் அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேணடியது அரசாங்கத்தின் கடமை. இதனை கௌரவப் பிரசசினையாகக் கருத முடியாது என் றும் தெரிவித்தார். (200)

## ஜப்பானிய...

பீட்டுப் பணியில் ஒரு கட்டமாக நேற்றையதினம் இக்குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான தேவை மதிப்பீடுகளை இக்குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

ஜயிக்கா (JICA) என்று அழைக்கப்படும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய நிறுவனத்தின் (JAPAN INTERNATIONAL COOPERATION AGENCY), தென்மேற்கு ஆசிய பிராந்திய விவகாரங்களுக் கான பணிப்பாளர் தலைமையில் யாழ். வருகை தந்திருக்கும் இக் குழுவினர்- இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தமது மதிப்பீட்டுப்பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றனர். படை அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகள் மற்றும் ஏனைய அனைத்துத்தரப்பினரையும் இக் குழுவினர் சந்திக்கவுள்ளனர்.

இக்குழுவின் தலைவர் காரு இவாசாஹி மற்றும் பாதுகாப்பு முகாமைத்துறையைச் சேர்ந்த கற்சுயோஷி சைட்டோ இலங்கை ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவன வதிவிடப் பிரதிநிதி சுஜிகாரா, தொழில்நுட்ப உதவிக் கொள்கைத்துறையைச் சேர்ந்த திருமதி வகாகூ இமாராகா, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான யசுயூகி சசாகி ஆகியோர் மேற்படி குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜப்பானிய அரசின் பணிப்பின் பேரில் வருகைதந்த இக்குழுவினர் வட-கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கும் சென்று தமது பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக, தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின்போது அமைக்கப்பட்ட குழுவில் ஜப்பானியப் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு, தற்போது தேவை மதிப்பீட்டுக்காக வருகை தந்திருக்கும் குழுவினர், தமது மதிப்பீட்டு அறிக்கையை மேற்படி மனிதாபிமான உதவி வழங்குவதற்கான குழுவுக்கும் ஜப்பானிய அரசுக்கும் சமர்ப்பிக்கவுள்ளனர் (க,லி)

## வெளிநாட்டு...

அம்சமாக உயர்கல்வி மறுக்கப்பட்டதன் விளைவு என்பது தெரியவருகிறது. கடந்த ஒன்பது மாதங்களாக பேச்சுவார்த்தை முன்னேற்றம் கண்டு வருவதை நாம் காண்கிறோம்.

விடுதலைப் புலிகளை அவுஸ்ரேலிய அரசு தடைசெய்துள்ளது. அத்தடையை நீக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கே உள்ளது. இங்கு நான் அவதானித்தவற்றை அவுஸ்ரேலியாவிற்கு சென்று கூறுவேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மலையக முன்னணித் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரனுடன் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.

மதியம் 11.30 மணியளவில் ஜேர்மன் நாட்டின் இனவிவகார அமைச்சின் வெளிவிவகாரத்துக்கான தலைவர் கலாநிதி கிறிஸ்தோபர், பிரதித் தலைவர் ரூபராணி மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஆகியோர் அடங்கிய குழுவினரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேசினார்.

தற்போதய சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் குறித்தும் விடுதலைப் புலிகளா[ல்] மேற்கொள்ளப்பட்டுவரும் வேலை[த்] திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்து- ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளரும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடினார்.

## நெல்லியடியில்...

விபரம் வருமாறு:

சற்குணசிங்கம் ஜனார்த்தனன் (சிறுவன்), தர்மலிங்கம் துவாரகன், முகுந்தன், இராசையா இரேசன், மாணிக்கவாசகர் மனவேதன், சின்னத்துரை கதிர்காமநாதன், சாமுவேல் மோகனராஜ், கிட்ணர் யோகநாதன், சிதம்பரம் ராமலிங்கம், துரைராசா ராஜராஜன், அரியகுட்டி ஜெகன், தாமோதரம்பிள்ளை ஜெகன், தர்மகுலசிங்கம் பரஞ்சோதி குருபரன், ராமச்சந்திரன் பிறேம்நாத் ஆகியோரே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஐவரும் விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு ஆட்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டபோதும், சிகிச்சைக்காக மீண்டும் வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கிழக்குக் கடலில்...

கிடைத்ததையடுத்து நேற்றுக் காலை முதல் மாலை வரை கடற்படையினர் கிழக்கு கடற்பரப்பில் கடும் தேடுதல் நடத்தினர்.

எனினும், இப்பகுதிக்கு கப்பல்கள் ஏதும் வந்ததற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை என கடற் படை வட்டாரங்கள் பின்னர் தெரிவித்தன.

(01)

வலம்புரி பட்டாசுகள்
பண்டிகைக் காலங்களில் உங்களை மகிழ்விக்க
பட்டாசுகள், வாணவெடிகள்,
மத்தாப்புக்கள், சுழல் சக்கரங்கள்
ஏக விநியோகஸ்தர்
Saraswathi Stores
12, Wolfendhal Street, Colombo 13.
Tel : 348635, 432035 Fax : 471275
Email : saraswathy@sltnet.lk



ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

## புத்தளத்தில் பறக்கும் தட்டு ?

புததளம் பகுதியில் வானில் பறந்த மர்மப்பொருள் பறக்கும் தட்டாக இருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த புதனன்று இரவு சுமார் 15 அடி நீளமான ஒளிப்பொருள் ஒன்று புத்தளம் பகுதியில் வானில் பறந்ததைப் பொதுமக்கள் அவதானிததுள்ளனர். இந்த மர்மப்பொருள் குறித்து பொதுமக்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

## முகமாலை..

மா அதிபர் ஆனந்தராஜா ஆகியோரும் பங்குபற்றுவர். நாளைய சந்திப்பில் நெல்லியடிச்சம்பவம், நெடுந்தீவு விவகாரம் மற்றும் நாகர்கோவில் வீதி திறப்பு போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். (02)

## புலிகளின்...

விடயத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கதிர்காமர் தெரிவித்துள்ளார். நோர்வேயின் உதவியுடன் வானொலிக்கருவிகள் புலிகளுக்கு கொழும்பு ஊடாக வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின் றது. இது மிகவும் தவறானதாகும். இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி அந்தக் கருவிகளை எவ்வாறு வன்னிக்கு கொண்டு செல்லமுடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். அந்தக்கருவிகளை ராணுவத் தேவைக்கும் புலிகள் பயன்படுத்தலாம். அவ்வாறு ராணுவத் தேவைக்கு பயன்படுத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்றும் கேள்வி எழுப்பிய லக்ஷ்மன் கதிர்காமர், அந்த வானொலிக்கருவிகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை என்பது குறித்து விபரங்கள் எதுவும் யாருக்கும் தெரியாது என்றும், அது நோர்வேக்கு மாத்திரமே தெரியும் என்றும் குறிப்பிட்டார். இவ்வாறான செயற்பாடுகள் இந்தியாவிற்கும் பாதகமாக அமையும் என்றும் அவர் கூறினார். இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். (01,200)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.88 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.16 | 153.59 |
| 1 யூரோ | 97.89 | 99.13 |
| 1 சுவிஸ் பிராங் | 66.14 | 67.27 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 54.19 | 55.23 |
| 1 ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

முதுகலைமாணிப் பட்டப்பின் படிப்பு M.A
காமராஜர் பல்கலைக்கழகம்
[மதுரை]
✦ இப்பட்டத்திற்கான பாடநெறிக்கு பட்டதாரிகள் மட்டுமன்றி வேறு தகைமைகள் உள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.
✦ இதற்குரிய பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தில் 10-12-2002 இலிருந்து செய்து கொள்ள முடியும்.
✦ இதற்குரிய விரிவுரைகள் ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.
விபரங்களுக்கு-
இணைப்பாளர்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-306)

JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.
சிறுவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி - 2003
CHILDREN'S PROGRAM
இவ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவே கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
பதிவாளர்
இல. 07 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
பயிற்சி ஆரம்பம்
21.12.2002 (3.00pm)
28.12.2002 (3.00pm)
Duration 3 Months
2002 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி - 2003
விண்ணப்பப் படிவம்
முழுப் பெயர் ..........................
முகவரி ..........................
பிறந்த திகதி ..........................
மேலே தரப்பட்ட விபரம் உண்மையெனவும் J.T.I விதிமுறைகளுக்கு ஏற்ப நடப்பேன் எனவும் இத்தால் கையொப்பம் இடுகின்றேன்
திகதி ....... விண்ணப்பதாரரின் கையொப்பம் ..........
Course Contents
Introduction
Word XP
Excel XP
Power Point XP
Encyclopedia
Games & Drawings
Head Office
No..11/108, Stanly road,
Jaffna.
Branch
No. 07, Palaly Road
Jaffna.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.